4

நவ்இந்தியர்டைம்ஸ்
சென்னை = 18 - 02 - 2017

# மத்திய அரசின் பட்ஜெட் அறிக்கை நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த வாய்ப்பில்லை



மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை 201718ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையிலும் அமைய வில்லை என மாநிலங்களவை உறுப்பினர் டி.கே.ரங்கராஜன் கூறினார். சென்னை அடுத்த தாமபரம் ஸ்ரீ சாய்ராம் கல்லூரியில் வணிக மேலாண்மை துறை சார்பில் பட்ஜெட் குறித்த விவாத கருத்தரங்கம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு டி.கே. ரங்கராஜன் பேசுகையில் மத்திய அரசு ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்களை கருத்தில் கொள்ளாமல் 500, 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என அறிவித்தது மக்களை மிகுந்த பாதிப்புகுள்ளாக்கியது. இதனால் சிறு, குறுந்தொழில்கள் அழியும் நிலைக்கு தள்ளப்பட்டும் வேலையில்லா திட்டாட்த்திற்கும் வழிவகுத்தது, எனவும் கள்ள பணம், கருப்பு பணம் ஒழிய இத்திட்டத்தை கொண்டு வந்தாலும் 130 கோடி மக்கள் தொகையில் அதிக பாதித்தது சிறுதொழில் வியபாரிகள், கூலிதொழி லாளர்களே என்று கூறினார்.

கருத்தரங்கில் கலந்து கொண்ட முன்னால் சட்டமன்ற உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் பேசுகையில் கருப்பு பணத்தை ஒழிப்பதாக கூறி பாமரமக்களை துயரத்தில் ஆளாக்கப் பட்டனர், தனது சொந்த ஊரான விருதுநகர் சுரண்டையில் கூட்டு குடும்பத்தில் பனை மரத்தில் ஏறி நுங்கு எடுத்து சம்பாதித்து 10லட்ச ரூபாய் வங்கியில் சேமித்து வைத்தவருக்கு வருமான வரி நோட்டீஸ் அனுப்பின்னதை சுட்டிகாட்டினார். கருப்பு பணம் என்ற போர்வையில் மக்களை கஷ்டபடுத்தியுள்ளனர், அமெரிக்கா தனது பொருளாதாரத்தில் இருந்து காத்து கொள்ள பல் வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதுபோன்று அண்டை நாடுகள் பல விழித்து கொண்டு தங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்த ஆயத்தமாகி வருகின்றன. இரயில்வே துறை குன்னூரில் இருந்து மேட்டுபாளையம், ஊட்டி வரை செல்லும் இரயிலை தனது சேவையில் இருந்து வணிக நோக்கத்துடன் தனியார் மயமாக்குவதும் இதனால் வேலைவாய்ப்பு இல்லாமல் பொருளாதாரம் சீரழியும் நிலைக்கு தள்ளப்படும், கடந்த பட்ஜெட்டில் இராணுவ ஆராய்ச்சி வளர்ச்சி திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை குறைத்து பாதுகாப்பு துறைக்கு ஒதுக்கப்பட்டது தவிர புதியதாக நிதி ஒதுக்கபடவில்லை, தமிழகத்தில் 200 விவசாயிகள் தற்கொலை செய்துள் ளனர், விவசாயிகளுக்கு நல்ல உரம், விதை போன்றை வழங்க இந்த பட்ஜெட்டில் அறிவிக்கபடவில்லை, இந்திய நாடு 104 செயற்கைகோள்களை செலுத்தி சாதனை படைத்துள்ளது. இதற்கு உங்களை போன்று மாணவர்களின் தொழிட்ப வளர்ச்சியே எனவும் கூறினார்.

பி ஜே பிமாநில செயலாளர் கே.டி.ராகவன் பேசுகையில்

அதிரடியாக பிரதமர் மோடி அறிவித்த ரூபாய் நோட்டுகள் செல்லாது என அறிவித்தார் ஏனெனில் நாட்டில் கருப்புபணம் அதாவது கணக்கில் வராத பணத்தை முடக்கினார், கள்ள பணம் முற்றிலும் ஒழித்தார் மாண வர்களே நன்கு சிந்தித்து பாருங்கள் காஷ்மீரில் இன்று அனைத்து மாணவ செல்வங்கள் பள்ளிக்கு செல்கின்றனர் ஏனெனில் தீவரவாதிகளின் கள்ளபணம் செயல்படவில்லை, தீவிரவாதம் ஒழிக்கபடுகின்றது. நாட்டில் பணபரிவர்த்தனை பாதிப்பு இருப்பினும் அதை முழுமனதுடன் மக்கள் ஏற்று கொண்டு மக்கள் அதற்கு ஆதரவு அளித்தனர், வருமான வரியை 5சதவீதமாக குறைத்துள்ளது என பல கருத்துக்களை முன் வைத்தார். இந்நிகழ்ச்சியில் மேலாண்மை இயக்குநர் கே.மாறன், கல்லூரி முதல்வர்கள் ஜெய்குமார், பழனிகுமார் உட்பட மாணவ, மாணவிகள் ஆசிரிய பெரு மக்கள் கலந்து கொண்டனர்.